**செய்தி வெளியீடு எண்: 54/2022** **நாள்: 01.07.2022**

**பத்திரிக்கை செய்தி**

**<u>சென்னை மெட்ரோ இரயிலில் தவரவிட்ட கடவுச்சீட்டு</u>**

**<u>இலங்கை பெண்ணிடம் உடனடியாக ஒப்படைப்பு</u>**

சென்னை மெட்ரோ இரயிலில் இலங்கையை சேர்ந்த பெண் லலின் (Laliain) என்பவர் சென்னை விமான நிலையத்திலிருந்து மண்ணடி மெட்ரோ இரயில் நிலையம் வரை இன்று (01.07.2022) காலை 8 மணியளவில் பயணித்தார். அவர் பயணித்த மெட்ரோ இரயிலில் தனது கடவுச்சீட்டை (Passport) தவரவிட்டார்.

சென்னை விமான நிலையத்திலிருந்து மெட்ரோ இரயிலில் பயணித்து மண்ணடி மெட்ரோ இரயில் நிலையத்தில் இறங்கிய பெண் லலின் தனது கடவுச்சீட்டை தவரவிட்டதை அறிந்து கொண்டார். உடனடியாக மண்ணடி மெட்ரோ இரயில் நிலைய கட்டுப்பாட்டு அலுவலருக்கு தகவல் தெரிவித்தார். அங்கிருந்த கட்டுப்பாட்டு அலுவலர் உடனடியாக தலைமை அலுவலக மைய கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவித்தார். அங்கிருந்து அவர் பயணித்த இரயில் ஒட்டுனரிடம் இதுப்பற்றிய தகவல் தெரிவிக்கப்பட்டது. தகவல் அறிந்த மெட்ரோ இரயில் ஒட்டுனர் அங்கிருந்த சக ஊழியர்களிடம் இதுப்பற்றிய விவரத்தை தெரிவித்தார். அந்த பெண்மணி பயணித்த மெட்ரோ இரயில் சுங்கச்சாவடி மெட்ரோ இரயில் நிலையத்தை அடைந்த போது அவர் தவரவிட்ட கடவுச்சீட்டு அவர் பயணித்த மெட்ரோ இரயில் பெட்டி இருக்கை அருகிலேயே இருப்பதை ஊழியர் கண்டறிந்தார். கிடைக்கப்பெற்ற கடவுச்சீட்டு சுங்கச்சாவடி நிலைய கட்டுப்பாட்டு அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டது.

தனது கடவுச்சீட்டு கிடைக்கபெறும் என்ற நம்பிக்கையிலேயே மண்ணடி மெட்ரோ இரயில் நிலையத்தில் அந்த பெண் காத்திருந்தார். பின்னர் சுங்கச்சாவடி மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து தகவல் தெரிவிக்கப்பட்டு மண்ணடி மெட்ரோ இரயில் நிலையத்தில் இருந்த அந்த பெண் சுங்கச்சாவடி மெட்ரோ இரயில் நிலையத்திற்கு அழைத்துவரப்பட்டார். அதன்பின்னர் இலங்கையை சேர்ந்த பெண் லலின் என்பவரிடம் சுங்கச்சாவடி நிலைய கட்டுப்பாட்டு அலுவலர் பி.ஸ்ரீநிவாசன் உரிய முறையில் கடவுச்சீட்டை ஒப்படைத்தார்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**